(ii) உருவில் காட்டப்பட்டுள்ள X, Y ஆகிய செயன்முறைகள் **இரண்டையும்** பெயரிடுக.

1. ....

2. ....

(iii) பசுவின் உடலில் X, Y ஆகிய செயன்முறைகள் **இரண்டும்** தூண்டப்படும் இடங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

செயன்முறை	தூண்டப்படும் இடம்
1. X	....
2. Y	....

(iv) பால் கரத்தற் செயன்முறையை நிரோதிப்புச் செய்யும் ஓமோன் மற்றும் அந்த ஓமோன் சுரக்கப்படும் இடம் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

1. ஓமோன் ....

2. சுரக்கும் இடம் ....

(C) 16 வயதுடைய ஆண் பிள்ளைக்கான நாளாந்தப் புரதத் தேவை 1 kg இற்கு 0.77 g ஆகும்.

(i) 16 வயது ஆண்பிள்ளையின் உடல் நிறை 40 kg ஆயின், அவரின் புரதத் தேவை எவ்வளவாகும்?

....

(ii) மனித உடலில் புரதத்தினால் ஆற்றப்படும் தொழிற்பாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

1. ....

2. ....

(iii) வேறு உணவுகளோடு ஒப்பிடும்போது பயறு புரதத்தின் உயிரியற் பெறுமானம் குறைவாகும். இதற்கான காரணம் யாது?

....

(D) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களில் மூன்றிலொரு பங்குக்கும் அதிகமான அளவு பழுதடைந்து இழப்புக்குள்ளாகின்றது. முறையான நற்காப்பு முறைகளைக் கைக்கொள்வதன் மூலம் இவ்வாறான இழப்புகளைக் குறைக்கலாம்.

(i) உணவு பழுதடைதல் என்றால் என்ன?

....

....

....

(ii) பழுதடைந்த உணவில் அவதானிக்கக்கூடிய இயல்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(1) ....

(2) ....

(3) ....

[பக். 9 ஐப் பார்க்க.

(iii) உணவு பழுதடைவதில் செல்வாக்குச் செலுத்தும் பௌதிகக் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(a) ....

(b) ....

(iv) மரபுரீதியான உணவு நற்காப்பு முறைகள் **இரண்டைக்** குறிப்பிட்டு அந்த நற்காப்பு முறைகளுக்கு அடிப்படையாக அமையும் கோட்பாடுகளைக் குறிப்பிடுக.

	மரபு ரீதியான நற்காப்பு	**கோட்பாடு**
(1)	....	....
(2)	....	....

* *

e-தக்சலாவ The National e-learning Portal for The General Education

[பக். 10 ஐப் பார்க்க.

க.பொ.த. (உ.தர) உதவிக் கருத்தரங்கு - 2016

விவசாய விஞ்ஞானம் II

பகுதி B - கட்டுரை வகை

* **நான்கு** வினாக்களுக்கு **மட்டும்** விடை எழுதுக. ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் **15** ஆகும்.
* உரிய இடங்களில் பெயிடப்பட்ட தெளிவான வரிப்படங்களைப் பயன்படுத்துக.

5. (i) காலநிலை மாற்றங்கள் விவசாய நடவடிக்கைகளில் ஏற்படுத்தும் பாதகமான செல்வாக்குகளை விவரிக்க.
(ii) உணவை தரநியமப்படுத்தலின் முக்கியத்துவத்தை விவரிக்க.
(iii) இலங்கையில் நெல் உற்பத்தியை அதிகரிக்க அரசினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை?

6. (i) விவசாயத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளின்போது நீர்மாசடைதல் நடைபெறும் விதங்களைக் குறிப்பிட்டு, அவற்றைக் குறைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை விவரிக்க.
(ii) பூச்சியப் பண்படுத்தல் மண்ணின் பௌதிக இயல்புகளில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விவரிக்க.
(iii) மண்ணீர்க் காப்புக்கென விவசாயிகளினால் மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளை விவரிக்க.

7. (i) நுண்முறை இனப்பெருக்கச் செயன்முறையை விவரிக்க.
(ii) மண்ணில் நீர்வடிப்பை மேம்படுத்த மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளை விவரிக்க.
(iii) தாவரங்களில் பரம்பரையலகு மாறல்களை ஏற்படுத்தக்கூடிய விதங்களை விவரிக்க.

8. (i) சேதனப் பயிர்ச்செய்கையின் முக்கியத்துவங்களை விவரிக்க.
(ii) பூச்சிப்பீடைக் கட்டுப்பாட்டுக்குப் பயன்படுத்தப்படும் சூழல் நேயக் கட்டுப்பாட்டு முறைகளை விவரிக்க.
(iii) பண்ணை அறிக்கைகளைப் பேணுவதன் முக்கியத்துவத்தை விவரிக்க.

9. (i) கோழியின் உணவுச் சமிபாட்டுச் செயன்முறையை விவரிக்க.
(ii) தரமான பயிர் விளைச்சலைப் பெறுவதற்கென கைக்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகளை விவரிக்க.
(iii) வித்துக்களின் வாழ்தகவைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை விவரிக்க.

10. (i) உணவுப் பல்வகைமையாக்கத்தின் முக்கியத்துவத்தை விவரிக்க.
(ii) தமது நிலைப்பை உறுதிப்படுத்தவென களைகள் கொண்டுள்ள இசைவாக்கங்களை விளக்குக.
(iii) ஒளித்தொகுப்பின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கங்களைக் விவரிக்க.

* * *